# மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி அலுவலகம்

ந.க.எண். 80/2010 நாள்.01.06.2010

## நாடு தழுவிய ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

திருநெல்வேலி மாவட்டம், மூலைக்கரைப்பட்டி பேரூராட்சிப் பகுதியில் அனைத்து பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சி 2010–11 திட்டத்தின் கீழ் வேலைகள் செய்ய தகுதியான ஒப்பந்தக்காரர்களிடமிருந்து (நெடுஞ்சாலைத்துறை அரசாணையின் படி மூன்றாம் நிலை) மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் அல்லது அவர்களது அதிகாரம் பெற்றவரால் பணிகள் செய்திட பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் இருந்து மூடி முத்திரையிட்ட ஒப்பந்தப்புள்ளிகள் கீழ்க்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு வரவேற்கப்படுகிறது.

**முக்கிய நிபந்தனைகள்:**

அட்டவணையில் கண்ட பணி செய்ய ஒப்பந்தக்காரர் ஒப்பந்தப்புள்ளிகள் அளிப்பதற்கான முன் தகுதியினை தெரிவிக்கும் தகவல் படிவத்தையும், வருடாந்திர செயல் திறனுக்கான சான்றிதழையும் மூடி முத்திரையிடப்பட்ட தனி உறையில் வைக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளி படிவத்தை மூடி முத்திரையிட்ட தனி உறையில் வைக்க வேண்டும். மேற்கண்ட இரு மூடி முத்திரையிடப்பட்ட உறைகளையும் மூடி முத்திரையிடப்பட்ட மற்றொரு உறையில் வைத்து கொடுக்க வேண்டும்.

**நிபந்தனைகள்:**

1) ஒப்பந்தபுள்ளி நமுனா 17.06.10 வியாழக்கிழமை வரை பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் உரிய கட்டணம் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2) ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.10 வெள்ளிக்கிழமை அன்று பிற்பகல் 3.00 மணி வரை வரவேற்கப்படுகிறது.
3) ஒப்பந்தப்புள்ளி கவரின் மேல் வேலையின் பெயர் எழுதிக் கொடுக்க வேண்டும்.
4) பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் 18.06.2010 பிற்பகல் 3.30 மணிக்கு ஆஜராயிருக்கும் ஒப்பந்தக்காரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
5) ஒப்பந்தப்புள்ளி பெற விரும்புவோர் அதில் குறிப்பிட்டுள்ள தொகையை டேவணி தொகையாக செலுத்தி ரசீது பெற்று ஒப்பந்தப்புள்ளிகளுடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
6) குறித்த காலத்திற்கு பின்வரும் ஒப்பந்தப்புள்ளிகள் எக்காரணம் கொண்டும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
7) டெண்டர் பேரூராட்சி மன்றத்தின் அங்கீகாரத்திற்குட்பட்டது.
8) பேரூராட்சி மன்ற ஒப்பந்தப்புள்ளிகளின் படி நடந்து கொள்வேன் என உறுதி கூறி ரூ.100/– மதிப்புள்ள முத்திரை தாளில் ஒப்பந்த உடன்படிக்கை எழுதிக் கொடுக்க வேண்டும்.
9) ஒப்பந்தப்புள்ளிகளின் விலைகள் அடித்தல் இன்றி எழுதப்பட வேண்டும்.
10) ஒப்பந்தபுள்ளிதாரர் நிபந்தனைகளுக்குட்பட்டு நடக்க தவறினால் உடனடியாக ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்பட்டு மறு ஒப்பந்தப்புள்ளி கோர செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
11) மேற்கண்டவாறு மறு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் ஏற்படும் நிதி இழப்பிற்கு முந்தைய ஒப்பந்தகாரரே பொறுப்பாவார்.
12) ஒப்பந்த காலத்தில் அலுவலக நிர்வாக காரணங்களால் எவ்வித முன்னறிவிப்புமின்றி ஒப்பந்தப்புள்ளிகள் ரத்து செய்யப்படும். அவ்வாறு நிகழ்கையில் எவ்வித நஷ்டஈடும் பேரூராட்சியில் கோர ஒப்பந்தகாரருக்கு உரிமை கிடையாது.
13) எவ்வித நேரத்திலும் ஒப்பந்தபுள்ளி தேதியை மாற்றவோ ரத்து செய்யவோ செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
14) செலுத்திய டேவணி தொகையானது ஒப்பந்த காலத்திற்கு பின் தணிக்கை முடிந்த பின்பு வட்டியின்றி திரும்ப கொடுக்கப்படும்.
15) இப்பேரூராட்சிக்கு செலுத்த வேண்டிய வரி மற்றும் கட்டணங்கள் பாக்கி வைத்துள்ளவர்கள் ஒப்பந்தபுள்ளிகள் அனுமதிக்கப்பட மாட்டாது.
16) மேற்கண்ட நிபந்தனைகளில் ஏதேனும் நீக்கவோ, சோர்க்கவோ எந்த நேரத்திலும் செயல் அலுவலருக்கு முழு அதிகாரம் உண்டு.
17) டெண்டர் டேவணி தொகை 1% டெண்டரின் போது ரொக்கமாக செலுத்த வேண்டும். மீதம் 4% பில்லில் பிடித்தம் செய்யப்படும்.
18) ஒப்பந்தக்காரர்கள் இதற்கு முன்னால் கட்டிட வேலைகள் செய்த விபரம் வழங்க வேண்டும்.
19) இதர விபரங்கள் தேவை எனில் அலுவலக நாட்களில் அலுவலக நேரங்களில் கேட்டு தெரிந்து கொள்ளலாம்.
20) மேற்படி பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு மற்றும் ஒப்பந்தப்புள்ளி படிவம் பற்றிய விபரத்தை http://townpanchayats.tn.gov.in/tenders/admin என்ற இணையதள முகவரியில் தெரிந்து கொள்ளலாம்.

**அனைத்து பேரூராட்சிகள் அண்ணா மறுமலர்ச்சி திட்டம் 2010–11**

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு (இலட்சம்) | வைப்புத் தொகை | ஒப்பந்தப்புள்ளி படிவ விலை |
|---|---|---|---|---|
| 1 | 11வது வார்டு அரசனார்குளம் முதல் காந்திநகர்காலனிவரை தார் சாலை அமைத்தல் | 12.00 | 12000 | 6240 |
| 2 | மூலைக்கரைப்பட்டி 3வது வார்டில் சமுதாய நலக்கூடம் கட்டுதல் | 15.00 | 15000 | 6240 |
| 3 | அரசனார்குளம் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அருகில் சுற்று சுவர் அமைத்து பூங்கா அமைத்தல் | 5.00 | 5000 | 780 |
| 4 | 10வது வார்டு கடம்பன்குளம் மற்றும் 5வது வார்டு பாரதியார் தெருவில் சிமெண்ட் ரோடு அமைத்தல் | 5.00 | 5000 | 780 |
| 5 | பேருந்து நிலையத்தில் வணிக வளாகம் பயணிகள் நிழற்குடை, கட்டண கழிவறை அமைத்தல். | 10.00 | 10000 | 6240 |
| 6 | 4வது வார்டு சுடுகாட்டில் நன்மைகூடம் கட்டுதல், அடிபம்பு அமைத்தல் மற்றும் மேம்படுத்துதல் பணிகள் செய்தல் | 7.00 | 7000 | 1560 |
| 7 | மூலைக்கரைப்பட்டி பேருந்து நிறுத்தத்தில் 16 மீட்டர் உயரமுள்ள உயர் கோபுர மின்விளக்கு அமைத்தல் | 5.00 | 5000 | 780 |

செயல் அலுவலர்
மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி
திருநெல்வேலி மாவட்டம்

**பெறுநர் :**

- பேரூராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தக்காரர்கள்
- சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், மூலைக்கரைப்பட்டி
- கிராம நிர்வாக அலுவலர், கிராம நிர்வாக அலுவலகம், மூலைக்கரைப்பட்டி
- அலுவலக விளம்பர பலகை.

**நகல்:**

- தலைவர் மற்றும் உபதலைவர், உறுப்பினர்கள் மூலைக்கரைப்பட்டி பேரூராட்சி.
- உதவி இயக்குநர் பேரூராட்சிகள் திருநெல்வேலி மண்டலம், பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி செயற்பொறியாளர் அவர்கள், பேரூராட்சிகள் திருநெல்வேலி பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.
- உதவி பொறியாளர் அவர்கள், வடக்கு வள்ளியூர் பேரூராட்சி.